**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 18** **நாள்: 09.02.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் பள்ளிகளில் நடத்தப்பெற்ற அறிவியல் போட்டிகளில் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்று கல்விச் சுற்றுலாவாக அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அழைத்து செல்லப்படவுள்ள 8 சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்கள் மற்றும் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ/மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்**

அறிவியல் போட்டிகளில் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்று கல்விச் சுற்றுலாவாக அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அழைத்து செல்லப்பட உள்ள 8 சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை இன்று (09.02.2018) அம்மா அரங்கத்தில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையும், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப்பும் இணைந்து “Wings to fly” என்ற திட்டத்தின் மூலம் மாணவர்களின் அறிவுத்திறனை வளர்க்கும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பல வகையான அறிவியல் சார்ந்த போட்டிகள் நடத்தி மாணவ/மாணவியர்களை அயல்நாடுகளுக்கு கல்விச்சுற்றுலாவாக அழைத்துச் சென்று வருகின்றனர்.

கடந்த 2016–ஆம் ஆண்டு மலேசியாவுக்கும், 2017–ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டிற்கும் மாணவ/மாணவிகள் கல்விச்சுற்றுலா சென்று வந்தனர். அதேபோல், 2017–18 கல்வியாண்டிலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மூன்று சுற்றுகளாக அறிவியல் போட்டிகள் நடத்தப்பட்டது. அப்போட்டியில் முதல் சுற்றில் 420 மாணவ/மாணவியர்களும் இரண்டாம் சுற்றில் 32 மாணவ/மாணவியர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

மூன்றாம் சுற்றானது இன்று “அம்மா அரங்கத்தில்” நடைபெற்றது. மூன்றாம் சுற்றில் 8 மாணவ/மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இறுதிச்சுற்றில் வெற்றி பெற்ற 8 மாணவ/மாணவியர்களும் வருகின்ற மே மாதம் அமெரிக்கா நாட்டில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு கல்விச்சுற்றுலாவாக அழைத்து செல்லப்பட உள்ளனர்.

அதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின்கீழ் இயங்கும் சைதாப்பேட்டை, சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9–ஆம் வகுப்பு பயிலும் மாணவி டி.ராமலட்சுமிக்கு, 26.01.2018 அன்று புதுதில்லியில் நடைபெற்ற இந்திய குடியரசு தின விழாவின் அணிவகுப்பு கலைநிகழ்ச்சியில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டமைக்காக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

மேலும், 2017–2018ம் ஆண்டிற்கான இளம் சுற்றுச்சூழல் விஞ்ஞானி விருது சென்னைப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய தொழில்நுட்பக் கழக (IIT சென்னை) வளாகத்தில் 21.1.2018ல் 123 அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில், சென்னை–81. வண்ணாரப்பேட்டை, T.H. சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் P.அரவிந்த், S.மனோஜ்குமார், P.S.பிரவீண் குமார் ஆகிய மாணவர்கள், திருமதி K.சசிரேகா பட்டதாரி அறிவியல் ஆசிரியையின் வழிகாட்டுதலின் பேரில் உப்புநீரை வீட்டிற்கு பயன்படுத்தும் நன்னீராக மாற்றும் திட்டத்தினை வடிவமைத்ததற்காக இளம் சுற்றுச்சூழல் விஞ்ஞானி விருது (YES AWARD) மற்றும் 2ஆம் பரிசுத்தொகையான ரூ.10,000/–வழங்கப்பட்டுள்ளது.

இளம் சுற்றுச்சூழல் விஞ்ஞானி விருது சென்னைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டதை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று ஷெனாய் நகரில் உள்ள அம்மா அரங்கத்தில் விருது பெற்ற மாணவர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

TECHNO CLUB போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றிப் பெற்ற முதல் 3 இடங்களைப் பிடித்த 3 மாணவர்களுக்கு நற்சான்றிதழ்கள், பதக்கங்கள், காசோலை மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது. மேலும், மாவட்ட அளவிலான போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பள்ளிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., கல்வி அலுவலர் திரு.டி.சுப்ரமணியன், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் பிரதிநிதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**